# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் (30.08.2021) 30 - ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 30.08.2021 | **பொருள் - 1**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி மற்றும் துணை இயக்குநர் நலப்பணிகள், திருச்சி அவர்களின் அறிவுரையின்படி, இந்நகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் , திருச்சி அவர்களின் பணியாளர் விலை விபர பட்டியல் அடிப்படையில் 10 எண்ணிக்கையிலான கொசு ஒழிப்பு பணியாளர்கள் நகர்மன்ற தீர்மான எண்.970 நாள்.29.07.2021-ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு, மாதா மகளிர் சுய உதிவிக்குழுவினர் மூலம் 01.08.2021 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 13.08.2021 தேதிய டெங்கு ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சி பகுதியில் முழுமையாக கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமித்து கொசு ஒழிப்பு பணிகள் தீவிரப்படுத்த அறிவுறுத்தப்பட்டதன் பேரில் ஏற்கனவே பணிபுரியும் 10 எண்ணிக்கையிலான கொசு ஒழிப்பு பணியாளர்கள் நீங்கலாக கூடுதலாக 15 எண்ணிக்கையிலான கொசு ஒழிப்பு பணியாளர்கள் அரசு விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிறு கிழமை நீங்கலாக 01.09.2021 முதல் 31.12.2021 வரையிலான 98 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பணியாளர் கூலி விபர பட்டியலின்படி (ESI, EPF உட்பட) ஊதியத்தில் பணி அமர்த்திட அனுமதியும் அதற்குண்டான செலவினம் 15 நபர்கள் x 98 நாட்கள் x ரூ.507.10 =ரூ.745437 பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>அனுமதிக்கலாம்<br>(1949/2021/எச்2) | **தீர்மான எண்.980 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>30.08.2021</td><td>பொருள் - 2<br>இந்நகராட்சி வார்டு எண்.5 பகுதியில் உள்ள அத்திக்குளம் - தர்மலிங்கம் தெரு கால்வாய் தூர்ந்து உள்ளதால் கழிவுநீர் செல்ல தேக்க ஏற்படும் சூழ்நிலை உள்ளது. தற்சமயம் மழைக்காலம் என்பதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி JCB இயந்திரம் மூலம் கால்வாய் தூர்வாரும் பணி 10 மணி நேரம் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.11,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்.981<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>30.08.2021</td><td>பொருள் - 3<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY1660-க்கு கிளட்ச் பிளேட் பழுதடைந்துவிட்டதால் புதிதாக மாற்றம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.19985/- பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு</u> :-<br>அனுமதிக்கலாம்.<br>(2815/2021/எச்2)</td><td>தீர்மான எண்.982<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.08.2021</td><td>பொருள் - 4<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480/J3/2015 நாள்.13.06.2016 மற்றும் அரசாணை எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை நாள்.16.11.2015-ல் அறிவுருத்தியுள்ளவாறு இந்நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் தகுதி வாய்ந்த அலுவலக பணியாளர்களுக்கு 2021-22-ம் வருடத்திற்கு வழங்க வேண்டிய சீருடை தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்பரேசன், கோவை நிறுவனம் மூலம் வாங்கி வழங்கிடவும் பணியாளர்களுக்கு அரசாணையின்படி தையல் கூலி வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.00/- இலட்சம் பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அனுமதிக்கலாம் (2772/2021/H1)</td><td>தீர்மான எண்.983<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.08.2021 | **பொருள் - 5**<br>இந்நகராட்சி வார்டு 5 பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கினில் மக்காத குப்பைகள் தினசரி கொட்டப்பட்டு வருகிறது. மேற்காணும் குப்பைகள் அதிகளவில் கொட்டப்பட்டு நிரம்பி உள்ளதால் வாகனங்கள் உள்ளே சென்று வர இடவசதி ஏற்படுத்திட ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் 25 மணி நேரம் பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம்<br>(2688/2021/எச்2) | **தீர்மான எண்.984**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**